# 5ஜி இல்லாத ஒவ்வொரு நொடியும்

# ஒரு வாய்ப்பை இழப்பதற்கு சமம்

## 4ஜி - நிறைவேற்றப்படாத வாக்குறுதிகளின் ஒரு கண்ணோட்டம்

நீங்கள் எதிர்பார்த்த வேகத்தை விட கோப்புகளின் பதிவிறக்கம் மெதுவாக இருப்பதால் எத்தனை தடவை நீங்கள் விரக்தி அடைந்திருக்கிறீர்கள்? இது போன்ற நேரங்களில் நாம் செலுத்தும் கட்டணத்திற்கு ஏற்ற வேகமும் ஆற்றலும் இல்லாததால் நமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளால் ஏமாற்றம் அடைகிறோம்.

உண்மையாக நமக்கு என்ன கிடைக்கிறது என்று நினைக்கும் சூழ்நிலை வரும்போது இன்னும் அதிகமாக வேண்டும் என விரும்புகிறோம். நிலைமையை இன்னும் மோசமாக்கும் வகையில், சீரற்ற தரவு வேகம், மற்றும் பயன்பாடுகளில் இடையூறுகள் ஏற்படும்போது இப்போது, இங்குள்ள நமது சூழ்நிலைகளை மட்டும் இது பாதிக்காது, ஆனால், நமது வாழ்வாதாரமும் வணிகங்களும் பாதிக்கக் கூடிய அளவிற்கு இது அதிகமாகும்.

மலேசியாவின் தற்போதைய 4ஜி பயன்பாட்டில் உள்ள சவால்களையும் கூறுகளையும் பார்க்கும்போது, இந்தப் பிரச்சினை பரவலாக உள்ளது என்பது தெரிய வரும்.

கடந்த ஆண்டு மட்டும், மலேசியர்களின் கைப்பேசி தரவுகள் பயன்பாடு 2020 முதல் 2021 வரைக்குமான ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 35.2 விழுக்காடு என ஆசியானில் மிக உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்துள்ளது.




*Source MCMC*

## பிரச்சினை 1: குறையும் நெட்வொர்க் தரம்

**இன்னும், கடந்த ஆண்டு பயன்பாடு உச்சத்தை எட்டியபோதும், கைப்பேசி சேவைகள் மீதான புகார்கள் முந்தைய ஆண்டை விட 433% அதிகரித்தன. இப்புகார்களில் 90% நெட்வொர்க் தரம் தொடர்பானவை.**




தலா ஒரு வாடிக்கையாளருக்கான மாதாந்திர விலை, மலேசியாவின் ஜிடிபி தொடர்பானது

## பிரச்சினை 2: தரத்துடன் ஒப்பிடும்போது அதிக விலை

**இருந்தபோதிலும், அண்டை நாடுகளுடன் ஒப்பிடும்போது தங்கள் கைப்பேசி சேவைகளுக்காக மலேசியர்கள் உயரிய சராசரி பயனீட்டாளர் விலைகளைக் கொடுக்கின்றனர். இது தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.5% அல்லது சராசரியாக மாதத்திற்கு 50 வெள்ளி.**




## பிரச்சினை 3: பிராந்திய மற்றும் உலகளாவிய அளவில் மலேசியா பின்தங்கியுள்ளது

**இதன் விளைவாக, 4ஜி கைப்பேசி தரவு வேகம் சம்பந்தப்பட்டதில் இக்கேந்திரத்தில் மலேசியாவின் 4ஜி-யின் உண்மை நிலை அதன் தரம் குறைந்ததால் பாதிக்கப்பட்டுள்ளது. உலகளவில் நாம் இன்னும் பின்தங்கியிருக்கிறோம். தரமான கைப்பேசி இணைப்பு ரீதியில் 81 ஆவது இடத்திலும், ஆசியான் நாடுகளின் வரிசையில் 9 ஆவது இடத்திலும் இருக்கிறோம் என உலக கைப்பேசி அனுபவம் என்பது மீதிலான அண்மைய ஆய்வு காட்டுகிறது.**

## பிரச்சினை 4: நகர்ப்புற - கிராமப்புற டிஜிட்டல் பிரிவினை

**மேலும், தொலைத்தொடர்பு நிறுவனங்களின் கைகளில், குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட குடியிருப்புகள் மற்றும் கிராமப்புற பகுதிகள் புறக்கணிக்கப்பட்டுள் ளன. இது ஒரு மிகப்பெரிய டிஜிட்டல் பிரிவினையை ஏற்படுத்தியுள்ளது. நகர்ப்புறங் களுக்கு வெளியே 44 விழுக்காட்டினர் வரை மட்டுமே தங்கள் 4ஜி இணைப்பை பெற முடிகிறது. ஆனால், நகர்ப்புறங்களில் 83.7 விழுக்காட்டினருக்கு இந்த வசதி உள்ளது.**

